செ.வெ.எண்:30 நாள்:15.05.2018

**கரூர் மாவட்டத்தில் தகுதிவாய்ந்த நபர்கள் தமிழ்செம்மல் விருது பெற விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அழைப்பு.**

தமிழ்நாட்டில் தமிழ்வளர்ச்சிக்காக அரும்பாடுபடும் தமிழ் ஆர்வலர்களைக் கண்டறிந்து அவர்தம் தமிழ் தொண்டினைப்பெருமைப்படுத்தி, ஊக்கப்படுத்தும் வகையில் "தமிழ்ச்செம்மல்" விருது ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகின்றது. இவ்விருது மாவட்டத்திற்கு ஒருவர் வீதம் (32 பேருக்கு) வழங்கப்படும். கடந்த 2015, 2016, 2017-ஆம் ஆண்டுகளில் 96 பேருக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தமிழ்ச்செம்மல் விருதானது வழங்கப்பட்டது. அவ்வகையில் 2018-ஆம் ஆண்டிற்கான தமிழ்ச்செம்மல் விருதுக்கு கரூர் மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ் வளர்ச்சிக்காக அரும்பாடுபடும் தமிழ் ஆர்வலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இவ்விருது பெறுபவர்களுக்கு ரூ.25 ஆயிரம் பரிசுத் தொகையும், தகுதியுரையும் வழங்கப்படவுள்ளது.

விருதுக்குரிய விண்ணப்பப் படிவத்தினை தமிழ்வளர்ச்சித்துறையின் www.tamilvalarchithurai.com என்ற வளைதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். விண்ணப்பிப்பவர்கள் தன் விவரக் குறிப்புடன் நிழற்படம் இரண்டு, அவர்கள் ஆற்றிய தமிழ்ப்பணி ஆகிய விவரங்ளுடன் கரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திலுள்ள தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் அலுவலகத்தில் 04.06.2018 ஆம் நாளுக்குள் விண்ணப்பிக்க வேண்டுமென கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

**வெளியீடு:**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**கரூர்.**